Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI
**C. C.No.120 / 2022**

DEPOSITION OF WITNESS : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகராஜன் | Father's Name/ Husband Name | : சுப்பிரமணியன் |
| Village | திண்டுக்கல் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.02.2024

(எதிரி ஆஜர் )

முதல் விசாரணை

நான் ஆண்டிபட்டி வனச்சரகத்தில் வனச்சரக அலுவலகராக பணிபுரிந்து 30.09.2022 அன்று ஓய்வு பெற்றேன். கடந்த 26.01.2022 அன்று வனவர் விக்னேஷ் , வனக்காப்பாளர்கள் தங்கமணி, ராஜசேகர் சுமார் 09.00 மணியளவில் நான் அலுவலகத்தில் இருக்கும்போது வெடிவைத்து வேட்டையாடிய காட்டுப்பன்றியை இருசக்கராவாகனத்தில் சாக்குப்பையில் வைத்து எதிரிகள் இருவரும் கொண்டுவந்தனர். அப்போது வனவர் விக்னேஷ் , வனக்காப்பாளர்கள் தங்கமணி, ராஜசேகர் ஆகியோர்கள் ரோந்து சென்றபோது சந்தைமலைசரகத்தின் அருகில் வைத்து எதிரிகளிடம் இருந்து கைப்பற்றியதாக நான் ஆண்டிபட்டி வனச்சரக அலுவகதத்தில் இருந்தபோது என்னிடம் வந்து ஒப்படைத்தார்கள் . எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களை என்னிடம் ஒப்படைத்தார்கள். படிவம் 95, அ படிவம் ஆகியவற்றை நான் தயார் செய்து நீதிமன்றத்திற்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை அனுப்பி வைத்தேன் . **படிவம் 95 அசாஆ 1.** (எதிரிகளின் செல்போன்கள் - 2 , இருசக்கரவாகனம் -1, வேட்டையாடப்பட்ட காட்டுப்பன்றியின் உடல் .)

இருசக்கரவானம் **சா.பொ,ஆ 1** ( வாகனம் ஆஜர்படுத்தப்பட்டு , இடைக்காலமாக எதிரி வசம் ஒப்படைக்கப்பட்டதால் மீண்டும் அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.02.29 15:34:42 +0530

Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI
**C. C.No.120 / 2022**

DEPOSITION OF WITNESS : P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : **விக்னேஷ்** | Father's Name/ Husband Name | : **ராஜசேகர்** |
| Village | **ஆண்டிபட்டி** | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.02.2024

**(எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆண்டிபட்டி வனச்சரகத்தில் இராஜகோபாலன்பட்டி பிரிவு வனவராக உள்ளேன். கடந்த 26.01.2022 அன்று சுமார் 07.00 மணியளவில் ஆண்டிபட்டி தெற்கு பீட் சந்தமலைசரகபகுதியில் வனக்காப்பாளர்கள் தங்கமணி , இராஜசேகர், வனக்காவலர் குமார் ஆகியோருடன் ரோந்து சென்றபோது எதிரிகள் இருவரும் வனப்பகுதிக்குள் இருந்து சாக்குமூட்டையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார்கள் . எதிரிகள் எங்களை கண்டதும் கையில் வைத்திருந்த சாக்கமூட்டையை வனப்பகுதிக்குள் மறைத்து வைத்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். நாங்கள் விசாரித்தபோது நாங்கள் சும்மாகத்தான் வனப்பகுதிக்குள் சென்றோம் என்று கூறினார்கள். வனக்காவலர் குமார் அவர்கள் மறைத்து வைத்த வனப்பகுதிக்குள் வந்து சாக்குமூட்டையை எடுத்துவந்தார் . வனக்காப்பாளர் தங்கமணி , வனக்காவலர் குமார் சாக்குமூட்டையை திறந்து பார்த்தபோது முகம் சிதைந்த நிலையில் முழு உடலுடன் கூடிய காட்டுப்பன்றி ஒன்று இறந்த நிலையில் இருந்தது . எதிரிகளை விசாரித்ததில் 1வது எதிரி இரவில் அவுட் வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடுவதற்காக சுற்றிக்கொண்டிருந்தோம் காலை 05.30

மணியளவில் 1ம் எதிரி வைத்திருந்த அவுட்டில் அந்த காட்டுப்பன்றி இறந்துவிட்டதாகவும் , 2ம் எதிரி அதை எடுத்துச்செல்வதற்காக அழைத்ததாகவும் விசாரணையில் தெரிவித்தார்கள் . சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளிடம் வனக்காப்பாளர் தங்கமணி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அதன் பின்னர் ஸ்தல மகஜர் , H நமுனா ஆகியவை தயார் செய்தார் . பின் ஆண்டிபட்டி வனச்சரக அலுவலகத்திற்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் சென்றோம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.02.29 15:34:49 +0530

Dt.:    Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No.120 / 2022

DEPOSITION OF WITNESS : P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கமணி | Father's Name/ Husband Name | : சுப்பிரமணி |
| Village | நாலுவேதபதி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.02.2024

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது கம்பம் மேற்கு வனச்சரகத்தில் மந்திப்பாறை பீட் வனக்காப்பாளராக உள்ளேன். ஆண்டிபட்டிப வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணியில் இருந்தபோது கடந்த 26.01.2022 அன்று சுமார் காலை 07.00 மணியளவில் ஆண்டிபட்டி தெற்கு பீட் சந்தமலைசரகபகுதியில் வனவர் விக்னேஷ் , வனக்காப்பாளர் இராஜசேகர், வனக்காவலர் குமார் ஆகியோருடன் ரோந்து சென்றபோ இருவர் வனப்பகுதிக்குள் இருந்து சாக்குமூட்டையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார்கள். எதிரிகள் எங்களை கண்டதும் கையில் வைத்திருந்த சாக்கமூட்டையை வனப்பகுதிக்குள் மறைத்து வைத்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள் . நாங்கள் விசாரித்தபோது நாங்கள் சும்மாகத்தான் வனப்பகுதிக்குள் சென்றோம் என்று கூறினார்கள் . வனக்காவலர் குமார் அவர்கள் மறைத்து வைத்த வனப்பகுதிக்குள் வந்து சாக்குமூட்டையை எடுத்துவந்தார். நானும் வனக்காவலர் குமார் சாக்குமூட்டையை திறந்து பார்த்தபோது முகம் சிதைந்த நிலையில் முழு உடலுடன் கூடிய காட்டுப்பன்றி ஒன்று இறந்த நிலையில் இருந்தது .

எதிரிகளை விசாரித்ததில் 1வது எதிரி இரவில் அவுட் வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடுவதற்காக சுற்றிக்கொண்டிருந்தோம் காலை 05.30 மணியளவில் 1ம் எதிரி வைத்திருந்த அவுட்டில் அந்த காட்டுப்பன்றி இறந்துவிட்டதாகவும் , 2ம் எதிரி அதை எடுத்துச்செல்வதற்காக அழைத்ததாகவும் விசாரணையில் தெரிவித்தார்கள் . சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளிடம் நான் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன் . எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2 OPPO போன், இருசக்கரவாகனம் ஆகியவற்றை H நமுனா, ஸ்தல மகஜர் மூலம் பதிவு செய்தேன். H நமுனா ( 3 நகல்கள்) **அசாஆ 2.** ஸ்தல மகஜர் **அசாஆ 3.** 1வது ஒப்புதல் வாக்குமூலம் **அசாஆ 4.** 2 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் **அசாஆ 5.** பின் ஆண்டிபட்டி வனச்சரக அலுவலகத்திற்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் சென்றோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.02.29 15:34:57 +0530

Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 120 / 2022**

DEPOSITION OF WITNESS : P.W. 4

| | | | |
|---|---|---|---|
| Name | : **இராஜசேகர்** | Father's Name/ Husband Name | : **மணி** |
| Village | **தேனி** | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.02.2024

**(எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரியகுளம் வனச்சரகத்தில் தேவதானப்பட்டி பீட் வனக்காப்பாளராக உள்ளேன். ஆண்டிபட்டி வனச்சரகத்தில் மோரூத்து பீட் வனக்காப்பாளராக பணியில் இருந்தபோது கடந்த 26.01.2022 அன்று சுமார் காலை 07.00 மணியளவில் ஆண்டிபட்டி தெற்கு பீட் சந்தமலைசரகபகுதியில் நான், வனவர் விக்னேஷ், வனக்காப்பாளர் தங்கமணி, வனக்காவலர் குமார் ஆகியோருடன் ரோந்து சென்றபோது சந்தேகப்படும்படியான இரு நபர்கள் வனப்பகுதிக்குள் இருந்து சாக்குமூட்டையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார்கள் . எதிரிகள் எங்களை கண்டதும் கையில் வைத்திருந்த சாக்கமூட்டையை வனப்பகுதிக்குள் மறைத்து வைத்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள் . நாங்கள் விசாரித்தபோது நாங்க தற்செயலாக வனப்பகுதிக்குள் சென்றோம் என்று கூறினார்கள். வனக்காவலர் குமார் அவர்கள் மறைத்து வைத்த வனப்பகுதிக்குள் வந்து சாக்குமூட்டையை எடுத்துவந்தார். வனக்காவலர் குமார் சாக்குமூட்டையை திறந்து பார்த்தபோது முகம் சிதைந்த நிலையில் முழு உடலுடன் கூடிய காட்டுப்பன்றி ஒன்று இறந்த

நிலையில் இருந்தது . எதிரிகளை விசாரித்ததில் 1வது எதிரி இரவில் அவுட் வைத்து காட்டுப்பன்றியை வேட்டையாடுவதற்காக சுற்றிக்கொண்டிருந்தோம் காலை 05.30 மணியளவில் 1ம் எதிரி வைத்திருந்த அவுட்டில் அந்த காட்டுப்பன்றி இறந்துவிட்டதாகவும் , அந்த பன்றியானது அதிக எடையுடன் இருந்ததால் 2ம் எதிரி அதை எடுத்துச்செல்வதற்காக அழைத்ததாகவும் விசாரணையில் தெரிவித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளிடம் வனக்காப்பாளர் தங்கமணி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார் . அதில் நான் சாட்சியமாக கையொப்பம் செய்தேன்.எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 2 OPPO போன், இருசக்கரவாகனம் ஆகியவற்றை H நமுனா, ஸ்தல மகஜர் மூலம் பதிவு செய்தார் . ஸ்தல மகஜரில் நான் கையொப்பம் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**</u>

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.02.29 15:35:09 +0530